செய்தி வெளியீடு எண்:668 நாள் : 14.12.2015

# மழை வெள்ளத்தினால் பாதிப்படைந்த நெடுஞ்சாலைத்துறை சாலைகள் சீரமைப்பு (14.12.2015 அன்றைய நிலவரம்)

- மழை வெள்ளத்தால் சேதமடைந்த நெடுஞ்சாலைத்துறை சாலைகள் மற்றும் சிறுபாலங்களைத் தற்காலிகமாக சீரமைக்க தமிழ்நாடு அரசு ரூ.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் மாவட்டங்களுக்கு தலா ரூ.12 கோடியும், சென்னை மாவட்டத்திற்கு ரூ.6 கோடியும் மேலும் வெள்ள சேதம் ஏற்பட்டுள்ள இதர 8 மாவட்டங்களில் உடனடி சீரமைப்பிற்காக ரூ.8 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- வெள்ள சேதப் பணிகளை துரிதப்படுத்தி சீரமைக்க விதிமுறைகள் வரையறுக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தற்காலிக சாலை சீரமைப்பு பணிகள் போர்க் கால அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட்டு 30 நாட்களுக்குள் முடிக்கவும் திருவள்ளூர் மாவட்டத்தில் பழுதடைந்த நான்கு பெரிய பாலங்கள் (திருத்தணி–நாகலாபுரம், கனகம்மாசத்திரம்–தக்கோலம், கொரட்டூர்–தின்னனூர்–பெரிய பாளையம், காஞ்சிபுரம்– வந்தவாசி) அமைவிடத்தில் போக்குவரத்து 45 நாட்களுக்குள் முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது..

- காஞ்சிபுரம் மாவட்டம் இரும்புலிச்சேரி கிராமத்திற்கு செல்லும் சாலையில் மழை வெள்ளத்தால் சேதமடைந்த தரைப்பாலத்தை சீரமைக்கும் பணி போர்க் கால அடிப்படையில் நடைபெற்று வருவது நாளை முடிவடையும். இப்பணியினை 60 கான்கிரீட் குழாய்கள், 1500 மண் மூட்டைகள், 1 ஜே.சி.பி மற்றும் 3 பொக்கலைன் இயந்திரங்கள் கொண்டு நடைபெற்று வருகிறது. இப்பாலம் சீரமைப்பதால் 6000 மக்கள் சுற்று வட்டார கிராமத்தில் பயனடைவர்.

- திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி ஆவடி சாலையில் மழை வெள்ளத்தால் சேதமடைந்த பழைய செங்கல் வளைவு பாலத்திற்கு பதிலாக தற்காலிக குழாய்

பாலம் அமைக்கும் பணி போர்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இப்பணியினை 15 கான்கிரீட் குழாய்கள், 7000 மண் மூட்டைகள், 2 ஜே.சி.பி மற்றும் 4 பொக்கலைன் இயந்திரங்கள் கொண்டு நடைபெற்று வருகிறது. இப்பாலம் சீரமைப்பதால் 1,00,000 மக்கள் சுற்று வட்டார கிராமத்தில் பயனடைவர்.

- இவ்வாறு சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றம் கடலூர் மாவட்டங்களில் இதுவரை 570 கி.மீ நீளச் சாலைகளில் தற்காலிக வெள்ள சீரமைப்பு பணிகள் 41 உதவிப் பொறியாளர்கள், 69 சாலை ஆய்வாளர்கள் மற்றும் 850 சாலைப் பணியாளர்களை உள்ளடக்கிய சிறப்புக் குழு மற்றும் ஏற்கனவே உள்ள நெடுஞ்சாலைத்துறை பணியாளர்களைக் கொண்டு சீரமைக்கப்பட்டுள்ளது. மேலும் சீரமைப்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**